# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:110** **தேதி:-28.06.2016**

# FORUM கூட்ட முடிவுகளும் இன்ன பிற செயதிகளும்

அன்பார்ந்த தோழர்களே,

BSNL MS சங்க அலுவலகத்தில் 23.06.2016 அன்று தோழர் சுரேஷ் குமார் தலைமையில் நடைபெற்ற FORUM கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன:-

1. **தலமட்டங்களில் கருவிகள் பற்றாக்குறை**:- தலமட்டங்களில் ட்ராப் வயர், 5 PAIR கேபிள்கள், ஜம்பர் வயர் உள்ளிட்ட கருவிகள் மற்றும் பொருட்களில் கடுமையான பற்றாக்குறை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக DIRECTOR(F\CFA) அவர்களை சந்திக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட செயலாளர்கள் இது தொடர்பான தகவல்களை மத்திய சங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும்.
2. **இன்முகத்துடன் சேவை**:- இன்முகத்துடன் சேவை திட்டத்தின் அமுலாக்கம் தொடர்பாக விவாதித்த FORUM, ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக தனது திருப்தியை தெரிவித்தது. ஏப்ரல் மாதத்திலும், BSNL நிறுவனம் தொடர்ந்து அதிகப்படியான மொபைல் இணைப்புகளை வழங்கியுள்ளது. இதனை மேலும் முன்னெடுத்துச் செல்லவும் ஊழியர்களை அதிகப்படியாக இதில் பங்கேற்கச் செய்யவும், மாவட்ட தலைநகர்களில், 'FREE ROAMING', 'NIGHT FREE CALLING' 'FREE TO HOME' உள்ளிட்ட திட்டங்களை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் வகையில் ஊர்வலங்கள் நடத்த வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது. 10.08.2016 அன்று அனைத்து மாவட்ட தலைநகர்களிலும் இதற்கான ஊர்வலங்கள் நடத்த வேண்டும். இதன் தகவலை ஒரு கடிதத்தின் மூலம் BSNL CMDக்கு தெரிவிக்கப் பட்டுள்ளது.
3. **78.2% பஞ்சப்படி இணைப்பின் அடிப்படையில் அலவன்ஸ்கள் மாற்றம்**:- LTC மற்றும் MEDICAL ALLOWANCE ஆகியவற்றை மீண்டும் வழங்க வேண்டும் என்றும், 78.2% பஞ்சப்படி அடிப்படையில் வீட்டு வாடகைப்படி உயர்த்த வேண்டும் என்றும் நிர்வாகத்தை FORUM வற்புறுத்தி உள்ளது. இது தொடர்பாக CMD BSNLக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டுள்ளது.
4. **GPF முன்பணம் வழங்கும் அதிகாரத்தை DOT எடுத்துக் கொண்டது**:- இது தொடர்பாக விவாதித்த FORUM, இது தொடர்பாக TELECOM COMMISSIONன் MEMBER (FINANCE) அவர்களை சந்தித்து, DOT இந்த அதிகாரத்தை எடுத்துக் கொண்டாலும், GPF முன்பணம் வழங்குவதில் எந்த ஒரு தடையும் இருக்கக் கூடாது என வற்புறுத்த வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
5. **FORUMத்தில் மீண்டும் NFTE**:- FORUMத்தில் இருந்து NFTE விலகிக் கொள்வது என்று முடிவு செய்ததை வருத்தத்துடன் பரிசீலித்த FORUM, தனது முடிவினை NFTE சங்கம் மறு பரிசீலனை செய்து, மீண்டும் FORUMத்தின் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என இந்தக் கூட்டம் ஏகமனதாக வேண்டுகோள் விடுத்துள்ளது.

**78.2% பஞ்சப்படி இணைப்பின் அடிப்படையில் ஓய்வூதிய் மாற்றம்:-** 78.2% பஞ்சப்படி இணைப்பின் அடிப்படையில் ஓய்வூதியம் மாற்றம் என்கின்ற பிரச்சனை நீண்ட காலமக நிலுவையில் உள்ளது. கேபினட் குறிப்பினை மாற்றி எழுதும் படி சில காலங்களுக்கு முன் இந்த கோப்பினை பிரதமர் அலுவலகம் திருப்பி அனுப்பி இருந்தது. DOTயின் பதிலுடன் கேபினட்டிற்கு இந்த கேபினட் குறிப்பு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. விரைவில் கேபினட் இந்த பிரச்சனையில் நல்லதொரு முடிவு எடுக்கும் என நம்புகிறோம்.

**மத்திய் அரசு ஊழியர்களுக்கு ஆதரவாய் ஜூலை 11ல் ஆர்ப்பாட்டம்:-** 11.07.2016 முதல் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து மத்திய அரசு ஊழியர்கள் கால வரையற்ற வேலை நிறுத்தம் செய்ய முடிவெடுத்துள்ளனர். போராடும் மத்திய அரசு ஊழியர்களுக்கு ஆதரவாக 11.07.2016 அன்று அனைத்து மாவட்டங்களிலும், ஆதரவு ஆர்ப்பாட்டங்களை நட்த்திட வேண்டும் என மத்திய செயலகம் அறைகூவல் விட்டுள்ளது.

**நேரடி நியமன ஊழியர்களின் ஓய்வூதிய பங்கீடு:-** இது தொடர்பாக 24.06.2016 அன்று MEMBER FINANCE திருமிகு அன்னி மோரஸ் அவர்களை FORUM தலைவர்கள் சந்தித்து உரையாடினர். இந்த பிரச்சனையில் DOT மற்றும் DEPARTMENT OF PENSION & PW ஆகியவற்றின் கருத்துக்களை DEPARTMENT OF EXPENDITURE கேட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

**மத்திய செயற்குழு:-** ஜூலை மாதம் 18 முதல் 20 வரை புதுடெல்லியில் BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழு நடைபெற உள்ளது.

**JAO மற்றும் JTO தேர்வு விதிகளில் மாற்றம்:-** ஊழியர்கள் சந்திக்கும் கடுமையான பிரச்சனைகளில் தீர்வு ஏற்படும் வண்ணம் JAO RR 2001 மற்றும் JTO RR 2014 ஆகியவற்றில் ஒரு சில மாற்றங்களை செய்ய வேண்டும் என வலியுறுத்தி BSNL ஊழியர் சங்கம் DIRECTOR(HR) அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளது.

**78.2% பஞ்சப்படி இணைப்பு அடிப்படையில் HRA மாற்றம்:-** 34ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்தில் 78.2% பஞ்சப்படி இணைப்பின் அடிப்படையில் HRA மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதனை ஏற்க மறுத்த நிர்வாகம் SKILL UPGRADATION ALLOWANCEஐ மட்டும் மாற்ற ஏற்றுக் கொண்டது. ஆனால் HRA மாற்றத்திற்கு நிர்வாகம் கூறிய கருத்துக்கள் ஏற்புடையதில்லை என்று தெரிவித்துள்ள BSNL ஊழியர் சங்கம் 78.2% பஞ்சப்படி அடிப்படையில் HRA மாற்றம் செய்ய வேண்டும் என வற்புறுத்தி நிர்வாகத்திற்கு கடிதம் எழுதி உள்ளது.

**JE பதவிகளுக்கு ஆளெடுப்பு:-** மொத்தம் 2700 JE (TTA) பதவிகளுக்கான ஆளெடுப்பிற்கான அறிவிப்பினை நிர்வாகம் வெளியிட்டுள்ளது. 25.09.2016 அன்று இந்த தேர்வு நடைபெறும்.

**ஏப்ரல் மாதத்திலும் அதிக மொபைல் தொலைபேசி இணைப்புகளை BSNL வழங்கியுள்ளது:-** சமீபத்தில் TRAI வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் படி, நம் நாட்டின் மொத்த தொலைபேசி வாடிக்கையாளர் எண்ணிக்கை மார்ச் மாதத்திலிருந்த 1033 மில்லியனில் இருந்து ஏப்ரல் மாதத்தில் 1034 மில்லியனாக உயர்ந்துள்ளது. நகரப்புற வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 607.21 மில்லியனில் இருந்து 606.69 மில்லியனாக

குறைந்துள்ளது. ஆனால் கிராமப்புற வாடிக்கையாளர் எண்ணிக்கை 449.17 மில்லியனில் இருந்து 452.08 மில்லியனாக உயர்ந்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் BSNL 1.1 மில்லியன் வாடிக்கையாளர்களை அதிகரித்துள்ளது. அதற்கு பின் உள்ள ஏர்டெல் நிறுவனம் 9,78,230 வாடிக்கையாளர்களையும், ஏர்செல் நிறுவனம் 5,72,869 வாடிக்கையாளர்களையும் உயர்த்தி உள்ளன. எனினும் தனியார் நிறுவன்ங்கள் ஒட்டு மொத்தமாக 91.2% சந்தையினை பிடித்துள்ளது. அதே சமயம் ப்ராட் பேண்ட் வாடிக்கையாளர் எண்ணிக்கை 149.75 மில்லியனில் இருந்து 151.09 மில்லியனாகவும் உயர்ந்துள்ளது.

**மீண்டும் தொழிலாளர் நலச்சட்டங்களை மாற்ற முயற்சி**:- மோடி அரசாங்கம் பதவி ஏற்றவுடன், முதலாளிகளுக்கு சாதகமாக தொழிலாளர் நலச்சட்டங்களை மாற்ற முயற்சி எடுத்தது. இந்த மாற்றங்கள் மூலம் தொழிலாளர்களை 'அமர்த்தவும்- துரத்தவும்' அதிகாரத்தை முதலாளிகளுக்கு வழங்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எண்ணம். இந்திய நாட்டு தொழிற்சங்க இயக்கம் தனது கடுமையான போராட்டங்கள் மூலம் தனது எதிர்ப்பை பதிவு செய்தது. சிறிது காலம் அமைதியாக இருந்த மோடி அரசாங்கம் தற்போது மீண்டும் அந்த தொழிலாளர் நலச்சட்ட திருத்தங்களை அமுலாக்க முயற்சிக்கிறது. SHOP & ESTABLISHMENT ACT, EMPLOYEES PROVIDENT FUNDS & MISCELLANEOUS PROVISIONS ACT 1952, MATERNITY BENEFITS ACT 1961 மற்றும் EMPLOYEES COMPENSATION ACT-1923 ஆகிய சட்டங்களை திருத்த முயற்சிக்கின்றது. உழைக்கும் வர்க்கத்தை பாதிக்கும் எந்த ஒரு சட்ட திருத்தத்தையும் நாம் கடுமையாக எதிர்க்க வேண்டும்.

**05.07.2016 அன்று நடைபெற உள்ள ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக்குக:-** BSNLEU, SNATTA மற்றும் BSNLMS ஆகிய சங்கங்களைக் கொண்ட UNITED FORUM, BSNL இயக்குனர் குழுவின் எதிர்மறை நிலைபாட்டை எதிர்த்து 05.07.2016 அன்று அனைத்து கிளைகளிலும், கருப்பு அட்டையணிந்து ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என அறைகூவல் விட்டுள்ளது. E1 ஊதிய விகிதம், நேரடி நியமன ஊழியர்களின் ஓய்வூதிய பங்கீடு, 01.01.2007க்கு பின் பணியமர்த்தப்பட்டு விடுபட்ட போன ஊழியர்களுக்கு ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகை மற்றும் காசுவல் ஊழியர்களுக்கு பணிக்கொடை ஆகிய பிரச்சனைகள் நிர்வாக்க் குழுவின் ஒப்புதலை பெற்று இயக்குனர் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் நீண்ட காலமாக இது இயக்குனர் குழுவிடம் தேங்கியுள்ளது. இது தொடரக்கூடாது. எனவே இந்த ஆர்ப்பாட்டத்தை கூட்டணி சங்கங்களுடன் இணைந்து வெற்றிகரமாக்கிட வேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**22.05.2016 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகள்**: 22.05.2016 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வின் முடிவுகள் காலதாமதமாகின்ற விஷயம் தொடர்பாக 20.06.2016 அன்று தோழர் P.அபிமன்யு, GS BSNLEU, தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS மற்றும் தோழர் சுனில் கௌதம் Dy.GS SNATTA ஆகியோர் GM(Estt) திருமிகு மது அரோரா மற்றும் GM(Rectt) திருமிகு அனிமா ராய் ஆகியோரை சந்தித்து விவாதித்தனர். 2007ஆம் ஆண்டு தேர்வில் வெற்றிபெற்று பணியமர்த்தப்பட்டு இந்த தேர்வில் PROVISIONAL ஆக அனுமதிக்கப்பட்ட அனைத்து TTAக்களின் JTO தேர்வு முடிவுகளையும் வெளியிட நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக GM(Estt) தெரிவித்தார். ஹைதராபாத் CAT 18.05.2016 அன்று வழங்கியுள்ள உத்தரவு தொடர்பான LEGAL OPINIONக்காக காத்திருப்பதாக GM(Rectt) தெரிவித்தார். பேச்சு வார்த்தையில் கலந்துக் கொண்ட தலைவர்கள் தொடர்பான LEGAL OPINION வந்தவுடன் முடிவுகளை வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதனை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்

JTO LICE பிரச்சனையில், ராஜஸ்தான் மாநில நிர்வாகத்தின் செயல் திறனற்ற செயல்பாட்டின் காரணமாக ஜோத்பூர் CAT, தேர்வு முடிவுகளுக்கு தடை விதித்துள்ளது. எனவே நிர்வாகம் தேர்வு முடிவுகளை வெளியிட இயலாத நிலைக்கு உள்ளாகி உள்ளது. தேர்வு முடிவுகள் வெளியாவதற்கு, இந்த இடைக்கால தடையினை நீக்க தேவையான நடவடிக்கைகளை உறுதி செய்ய வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் DIRECTOR(HR) அவர்களுக்கு 24.06.2016 அன்று ஒரு கடிதம் எழுதி உள்ளது.

. மேலும் 2013ஆம் ஆண்டு நடைபெற்ற JTO LICE தேர்வில் ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் உள்ள கேள்விகளுக்கு கூடுதல் மதிப்பெண் வழங்கும் பிரச்சனை தொடர்பாக நிர்வாகத்திற்கு மீண்டும் ஒரு கடித்தத்தை நமது மத்திய சங்கம் நிர்வாகத்திற்கு எழுதியுள்ளது.

**GPF முன்பணத்தை DOT வழங்குவது தொடர்பாக:-** BSNL ஊழியர் சங்கத்தின் கடும் எதிர்ப்பையும் மீறி எதிர்காலத்தில் DOTதான் GPF முன்பணத்தை தரும் என தெரிய வருகிறது. BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு 20.06.2016 அன்று இந்த மாத GPF முன்பணத்திற்கான நிதியினை மாநிலங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்ள GM(T& BFCI) அவர்களை சந்தித்தார். அப்போது அவர் GPF முன்பணத்தை வழங்குவதற்கான பொறுப்பினை DOT எடுத்துக் கொண்டதாகவும் தெரிவித்தார். இந்த மாதம் பஞ்சாப் மாநிலத்திற்கு GPF முன்பணத்தை DOT வழங்குவதாகவும், இன்னமும் இரண்டு மாதத்தில் ம.பி மற்றும் உ.பி.(கிழக்கு) மாநிலங்களுக்கு DOT வழங்க உள்ளதாகவும் தெரிவித்தார். GPF முன்பணத்தை DOT வழங்கினாலும், அதற்கான SANCTIONஐ BSNLலே வழங்க வேண்டும் என்றும் BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் வற்புறுத்தினார். இந்த பிரச்சனை தொடர்பாக TELECOM COMMISSIONனின் MEMBER (FINANCE) உடன் விவாதிக்க வேண்டும் என GM(T& BFCI) தெரிவித்தார். BSNL ஊழியர் சங்கம் அவருடன் விவாதிக்கும் என்று நமது மத்திய சங்கம் தெரிவித்துள்ளது.

23.06.2016 அன்று FORUMத்தின் அமைப்பாளர் தோழர் P.அபிமன்யு, தோழர் பிரகலாத் ராய் GS AIBSNLEA, தோழர் K.செபாஸ்டியன் GS SNEA மற்றும் தோழர் சுரேஷ் குமார் GS BSNLMS ஆகியோர் MEMBER (FINANCE) திருமிகு அன்னி மோரஸ் அவர்களை சந்தித்து இந்த விஷயங்களை விவாதித்தனர். மேலும் GPF முன்பணம் வழங்குவதில் எந்த ஒரு தடையும் விதிக்கக் கூடாது எனவும் வற்புறுத்தி உள்ளனர். தலைவர்களின் கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என MEMBER (FINANCE) தெரிவித்துள்ளார்.

**TELECOM TECHNICIAN மற்றும் JUNIOR ENGINEER தேர்வுகளை விரைவில் நடத்துக:-** கார்ப்பரேட் அலுவலகம் ஏற்கனவே வெளியிட்டுள்ள தேர்வு அட்டவனையில் TELECOM TECHNICIAN (TM) மற்றும் JUNIOR ENGINEER (TTA) தேர்வுகள் தொடர்பாக இடம் பெறவில்லை. 20.06.2016 அன்று மீண்டும் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS ஆகியோர் GM(Estt) அவர்களை சந்தித்து இந்த தேர்வுகளுக்கான தேதிகளை உடனடியாக நிர்ணயம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர். மேலும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி என்றில்லாமல் TELECOM TECHNICIAN தேர்வினையும், +2 தகுதியில்லாமல் JUNIOR ENGINEER தேர்வினையும் ஒரு கட்ட தளர்வு என்ற முறையில் நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளனர். இது தொடர்பாக DIRECTOR(HR) மட்டத்திலும் விவாதிக்கப்படும் என நமது மத்திய சங்கம் தெரிவித்துள்ளது.

**அனாமலி மற்றும் ஊதிய தேக்க நிலை பிரச்சனைகள்**:- அனாமலி மற்றும் ஊதிய தேக்கநிலை பிரச்சனைகளை விரைவில் தீர்வு காண்பதற்காக BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து கார்ப்பரேட் நிர்வாகத்தை தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது. 20.06.2016 அன்று மீண்டும் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS ஆகியோர் GM(Estt) அவர்களை சந்தித்து விவாதித்து உள்ளனர். அனாமலி பிரச்சனைக்கு ஒப்புதலுக்காக DOTக்கு அனுப்பியுள்ளதாக GM(Estt) தெரிவித்துள்ளார். ஏற்கனவே ஓய்வு பெற்றவர்களுக்கும், அனாமலி பிரச்சனை தீர்வினால் பயன்பெறக்கூடியவர்களுக்கும், ஓய்வூதியத்தை DOT தான் மாற்ற முடியும் என்பதால் இவ்வாறு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். ஊதிய தேக்க நிலை பிரச்சனை தொடர்பாக சங்கங்களுடன் ஏற்பட்ட புரிதலின் அடிப்படையில் EF செக்ஷனுக்கு கோப்பு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த பிரச்சனை EF செக்ஷனில் தொடர்ந்து விவாதிக்கப்படும் என மத்திய சங்கம் தெரிவித்துள்ளது.

**PLI மற்றும் DESIGNATION COMMITTEEகளை உடனடியாக கூட்டுக**:- 20.06.2016 அன்று நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS ஆகியோர் GM(Restg) திரு A.M.குப்தா அவர்களை சந்தித்து PLI மற்றும் DESIGNATION COMMITTEEகளை கூட்டுவதற்கு கார்ப்பரேட் அலுவலகம் தாமதப்படுத்தி வருவதை சுட்டிக்காட்டினார்கள். விடுபட்ட கேடர்களின் பெயர் மாற்றத்திற்காக DESIGNATION COMMITTEEயையும், PLI கமிட்டியினையும் உடனடியாக கூட்ட வேண்டும் என்று வற்புறுத்தியதுடன் இது தொடர்பாக சில விவாதங்களையும் நடத்தியுள்ளனர்.

**AIBSNLEAஅகில இந்திய தலைவராக தோழர் சிவகுமார் தேர்வு**:- 17.06.2016 முதல் மைசூரில் நடைபெற்ற AIBSNLEA அகில இந்திய மாநாட்டில் AIBSNLEA சங்கத்தின் தமிழ் மாநில செயலர் தோழர் சிவகுமார் அகில இந்திய தலைவராகவும் தோழர் பிரகலாத் ராய் பொது செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தமிழ் மாநில FORUMத்தில் சிறப்புடன் பங்காற்றி வரும் தோழர் சிவகுமார் அகில இந்திய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதற்கும், இதர நிர்வாகிகளுக்கும் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**